நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்
திரு. சா. வரதராஜன், பி.ஏ., பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.
**பிரிவு 313(1)(ஆ) CrPC –இன் படியான விசாரணை**

எதிரி– சோமசுந்தரம் என்ற சோமு

| | | | |
|---|---|---|---|
| 1. | கேள்வி | : | அ.சா.1 –கருப்பசாமி பாண்டியன் அவருடைய புகாரில் 09.06.3023ம் தேதி பகல் 03.10 மணியளவில் சாத்தூர் பழைய அரசு மருத்துவமனை பின்புறம் வைத்து எதிரியாகிய நீங்கள் அவரை தகாத வார்த்தைகளால் பேசி, கத்தியால் இடது கையில் குத்தி, கொலை மிரட்டல் விடுத்தாகவும், சம்பவம் தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் மனு (அ.சா.ஆ.3) கொடுத்ததாகவும், சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் வழக்கு |
| 2. | கேள்வி | : | அ.சா.2– திரு.பிரைட் ஐசக் சுவாமி நாதன் சிறப்பு சார்பு ஆய்வாளர் அவருடைய சாட்சியத்தில் 13.06.2023ம் தேதி 20.00 மணியளவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆபிரகாம் நிலைய அலுவலில் இருந்த போது கருப்பசாமி பாண்டியன்(அ.சா.1) என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின்(அ.சா.ஆ.3) தன்மைகேற்ப சாத்தூர் நகர் காவல்நிலைய குற்ற எண் 218/2023 பிரிவுகள் 341, 294(b), 324, 506(2) இ.த.ச –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை(அ.சா.ஆ.4) பதிவு செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | வழக்கு தாக்கல் செய்த விபரம் தெரிந்து முன்ஜாமீன் வாங்கினேன். |
| 3. | கேள்வி | : | அ.சா.2– மேலும் அவருடைய சாட்சியத்தில் இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் முருகேசன் 13.06.2023ம் தேதி மதியம் 09.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சம்சுதீன், மாரீ ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர்(அ.சா.ஆ.5) மற்றும் வரைபடம் (அ.சா.ஆ.6) தயார் செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார் இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | இல்லை |
| 4. | கேள்வி | : | அ.சா.2– மேலும் அவருடைய சாட்சியத்தில், சார்பு ஆய்வாளர் முருகேசன் சாட்சிகள் கருப்பசாமி, பால்ராஜ், செய்யது அலி முன்னா, மாரீ, சம்சுதீன், பால்பாண்டி, மாரியப்பன், பெருமாள்சாமி, முருகன் த/பெ.ஜெயபால், முருகன் த/பெ.மாயாண்டி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | இல்லை |

| | | | |
|---|---|---|---|
| 5. | கேள்வி | : | அ.சா.2– மேலும் அவருடைய சாட்சியத்தில், சார்பு ஆய்வாளர் முருகேசன் வழக்கில் காயம்பட்ட அ.சா.1க்கு சிகிச்சை அளித்த சாத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் அர்ச்சனா அவர்களை விசாரணை செய்து அவரிடமிருந்து விபத்து பதிவேட்டை (அ.சா.ஆ.7) பெற்று அவருடைய வாக்குமுல்தத்தினை பதிவு செய்துள்தாகவும், இவ்வழக்கினை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆபிரகாம் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார்.இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | நான் கருப்பசாமி பாண்டியனுடன் சண்டை போடவில்லை |
| 6. | கேள்வி | : | அ.சா.2– மேலும் அவருடைய சாட்சியத்தில் சார்பு ஆய்வாளர் முருகேசன் பின்னர் தனது விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் குற்ற சம்பவம் உண்மை என தெரியவந்து எதிரிகள் மீது பிரிவுகள் 341, 294(b), 324, 506(2) இ.த.ச –ன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் வழக்கு |
| 7 | கேள்வி | : | வழக்கு பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்? |
| | பதில் | : | பொய் வழக்கு |
| 8 | கேள்வி | : | உங்கள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டா? |
| | பதில் | : | இல்லை |

கேள்விகள் என்னால் நேரடியாக எதிரியிடம் கேட்கப்பட்டு, அவர்கள் கூறிய பதில் என்னால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர், எண்.2
சாத்தூர்